**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 24/2025** **Date:24.02.2026.**

**(PW1)-** ஆல்பர்ட்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணம் நான் தாக்கல் செய்த பட்டா என்றால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி வா.சா.ஆ.15 ஆவணம் 1034/23 ஏ புல எண் சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். மேற்படி புல எண் சொத்திற்கு தான் நான் தீர்வை செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி தீர்வை செலுத்தியதற்கான ரசீதை தான் வா.சா.ஆ.7,14 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது சொத்தின் புல வரைபடம் என்றாலும் அதை நான் பார்த்துள்ளேனா என்றாலும் பார்த்தது இல்லை. மேற்படி புல வரைபடத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

2. 2, 3 வாதிகள் என்னைவிட அதிகம் படித்தவர்கள் என்றாலும் என்னை விட தெளிவாக சாட்சியம் அளிப்பார்கள் என்றாலும் சரிதான். மேற்படி வாதிகள் வழக்கில் சாட்சியம் அளிப்பார்களா என்றால் சாட்சியம் அளிப்பார்கள். எனக்கு தாவா சொத்து மற்றும் வழக்கு பற்றிய முழு விவரங்களும், ஆவணங்கள் பற்றிய முழு விவரமும் தெரியுமா என்றால் முழுமையாக தெரியாது கொஞ்சம் தெரியும். 2, 3 வாதிகள் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்களா என்றால் வந்துள்ளார்கள். தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வை இடும் போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை எந்த வரைபடத்தின் அடிப்படையில் அளவீடு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் சாட்சி பதில் அளிக்காமல் அமைதியாக உள்ளார். நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை யார் கொடுத்தார்கள் என்றால் வாதிகளாகிய நாங்கள் மூவரும் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 18 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 05.03.2026. தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.